Register No. | | | | | | | | |

**FAXA**

**5220–22**

(For the candidates admitted from 2017-2018 onwards)

B.A.LL.B. DEGREE (SEMESTER) EXAMINATIONS, JUNE 2022.

(Five - year Regular Course)

Fifth Year – Tenth Semester

CRIMINOLOGY AND PENOLOGY

GOVERNMENT LAW COLLEGE, TRICHY
07 SEP 2022
LIBRARY

Time : $2\frac{1}{2}$ hours Maximum : 70 marks

PART A — (2 × 12 = 24 marks)

Answer TWO of the following in about 500 words each.

பின்வருவனவற்றுள் இரண்டிற்கு ஒவ்வொரு கேள்விக்கும் ஏறத்தாழ 500 சொற்களில் விடையளிக்கவும்.

1. Criminals and law enforcement agents collectively are engaged in continuous conflict but none of them won-comment.

   குற்றவாளிகளுக்கும் சட்டத்தை கூட்டாக செயல்படுத்துபவர்களுக்கும் இடையே தொடர்ந்து சண்டை நடைபெறுகின்றது. எனினும் யாரும் வெற்றிப் பெறவில்லை – விமர்சிக்கவும்.

2. What do you mean by organized crimes? Mention the various types of organized crime.

   ஒருங்கிணைக்கப்பட்ட குற்றம் என்றால் என்ன? பல்வேறு வகையான ஒருங்கிணைக்கப்பட்ட குற்றம் குறித்து கூறுக.

3. What is Recidivism? What are the causes of recidivism? What steps would you advise for the treatment of Recidivists?

   மறுநிலைக் குற்றப்பான்மை என்றால் என்ன? மறுநிலைக் குற்றப்பான்மையின் காரணங்கள் யாது? மறுநிலைக் குற்றமனப்பான்மை உள்ளவர்களை குணப்படுத்துவதற்கு உண்டான வழிகளாக நீங்கள் எதைக் கூறுவீர்கள்.

PART B — (2 × 7 = 14 marks)

Answer TWO of the following in about 300 words each.

பின்வருவனவற்றுள் இரண்டிற்கு ஒவ்வொரு கேள்விக்கும் ஏறத்தாழ 300 சொற்களில் விடையளிக்கவும்.

4. Write notes on Neglected Child/Delinquent Juvenile.

   கவனிப்பாறற்ற மற்றும் கைவிடப்பட்ட குழந்தைகள் பற்றி குறிப்பு எழுதுக.

5. State the controversy between Auburn Prison System and Pennsylvania Prison Systems.

அபர்ன் சிறை முறைக்கும் பென்ஸில்வேனியா சிறை முறைக்கும் உள்ள வேறுபாடுகளைக் கூறுக.

6. Discuss in favour of and against the retention of Capital Punishment in India.

இந்தியாவில் மரண தண்டணையை வைத்துக் கொள்வதற்கு ஆதரவாகவும், எதிராகவும் விவாதிக்கவும்.

PART C — (5 × 4 = 20 marks)

7. Write short notes on FIVE of the following :

பின்வருவனவற்றுள் ஐந்திற்கு சிறு குறிப்புகள் வரைக :

(a) Religious Crime

மதம் சார்ந்த குற்றங்கள்

(b) Pre-classical School

பழமைவாத கருத்தாய்வியல் அமைப்பு

(c) Social Media Crimes

சமூகதள குற்றங்கள்

(d) Family trees and crime

குடும்ப கிளையும் குற்றமும்

(e) Sociopathic Personality

சமுதாய வழித்தவறலுள்ள ஆளுமை

(f) Born criminals and Criminaloid

பிறவிக் குற்றவாளிகள் மற்றும் தற்செயல் குற்றவாளிகள்

(g) Raffaele Garafalo and Sutherland

ரஃபேல் கேரோபேலோ மற்றும் சதர்லேண்ட்

PART D — (2 × 6 = 12 marks)

Answer TWO of the following by referring to relevant provisions of law and decided cases. Give cogent reasons.

பின்வருவனவற்றுள் இரண்டிற்கு சட்ட வகையங்கள் மற்றும் தீர்மானிக்கப்பட்ட வழக்குகளைக் கூறி தகுந்த காரணங்களுடன் விடையளிக்கவும் :

8. A 17 years old boy murdered a woman who approached him for some help. After murdering the woman, the boy stated that the woman was his cousin. During the press conference, after learning that the boy has concealed the

identity of the woman; one of the journalists questioned "Criminal behaviour is learned", where did he learned the behaviour? The alleged boy stated and referred his intimate group of boys responsible for his behaviour. Examine by applying the principle of Dr. Edwin H. Sutherland. Whether the intimate groups of boys could be held responsible? Discuss.

17 வயதுடைய சிறுவன் ஒருவர் தன்னிடம் சிறு உதவி கோரி வந்த ஒரு பெண்ணை கொலை செய்துவிட்டு, இறந்து போனது தனது சகோதரி என்கிறார். இறந்து போன பெண் அடையாளம் காணப்பட்ட பின் பத்திரிகையாளர் சந்திப்பில் பத்திரிகையாளர் ஒருவர், "குற்ற ஒழுக்கம் கற்ற ஒழுக்கம்" என்கிறார்களே நீங்கள் எங்கிருந்து கற்று கொண்டீர்கள் என கேள்வி எழுப்பினார். குற்றம் சுமத்தப்பட்ட அச்சிறுவன் தமது நெருங்கிய நண்பர்கள் குழுவை சுட்டி காட்டுகிறார். டாக்டர் எட்வின் H. சதர்லேண்ட் கோட்பாட்டினை கொண்டு ஆய்வு செய்க. குற்றம் சாட்டப்பெற்ற சிறுவனின் செய்கைக்கு அவருடைய நெருங்கிய நண்பர்கள் குழுவை பொறுப்பாக்க இயலுமா? விவாதி.

9. In some murders the bodies are brutally disfigured by the perpetrators. Analyse this issue under the lens of Psychological School.

சில கொலைகளில் உடல்கள் குற்றவாளிகளால் மிக மோசமாக சிதைக்கப்படுகின்றன. இதனை உளவியல் பள்ளி கோட்பாட்டின் அடிப்படையில் விளக்கவும்.

10. The National Crime Records Bureau has published the Crime Report for the year 2020–2021 which shows 40% raise in crimes against women. National Commission for Women also reported high cases on women harassment during this COVID–19 lockdown. Approach this scenario in criminological view.

தேசிய குற்ற அறிக்கை அமைப்பின் 2020–2021–ன் தரவுகளின் படி இந்தியாவில் 40% பெண்களுக்கெதிரான வழக்குகள் அதிகரித்துள்ளதாக காட்டுகின்றது. தேசிய மகளிர் ஆணையமும் கோவிட்–19 முழு அடைப்பு காலங்களில் பெண்களுக்கெதிரான துன்புறுத்தல் தொடர்பான குற்றங்கள் அதிகரித்துள்ளதாக வெளியிட்டுள்ளது. இந்த நடப்புகளை குற்றாய்வியல் கண்ணோட்டத்தில் ஆராயவும்.

Register No. [ ]

**FAXB**

5274–22

(For the candidates admitted from 2017 – 2018 onwards)

B.A.LL.B. DEGREE (SEMESTER) EXAMINATIONS, JUNE 2022.

(Five-year Regular Course)

Fifth Year – Tenth Semester

INTELLECTUAL PROPERTY LAW

GOVERNMENT LAW COLLEGE, TRICHY
07 SEP 2022
LIBRARY

Time : $2\frac{1}{2}$ hours

Maximum : 70 marks

PART A — (2 × 12 = 24 marks)

Answer TWO of the following in about 500 words each.

பின்வருவனவற்றுள் இரண்டிற்கு ஒவ்வொரு வினாவிற்கும் ஏறத்தாழ 500 சொற்களில் விடையளிக்கவும்.

1. Define "Industrial Design" and explain the designs that are registrable and non-registrable under the Designs Act, 2000.

   "தொழிலக வடிவமைப்பு" என்பதை விளக்கி, வடிவமைப்பு சட்டம் 2000ன் கீழ் பதிவு செய்யக் கூடிய மற்றும் பதிவு செய்ய இயலாத வடிவமைப்புகள் என்ன என்பதை விளக்கவும்.

2. "The procedure to obtain patent consists of many important stages" – Explain.

   "காப்புரிமை பெறுவதற்கான நடைமுறை பல முக்கிய நிலைகளை அடக்கியுள்ளது" – விளக்கவும்.

3. Discuss the various rights available to the author of the copyright in the Copyright Act.

   பதிப்புரிமை சட்டத்தில், பதிப்பாசிரியருக்குண்டான பல்வேறு உரிமைகளை விவாதிக்கவும்.

PART B — (2 × 7 = 14 marks)

Answer TWO of the following in about 300 words each.

பின்வருவனவற்றுள் இரண்டிற்கு ஒவ்வொரு வினாவிற்கும் ஏறத்தாழ 300 சொற்களில் விடையளிக்கவும்.

4. Explain the rules relating to Confidential Information.

   நம்பிக்கைக்குரிய தகவல்கள் குறித்த விதிகளை விளக்குக.

5. Discuss the powers and functions of the Registrar of Trade-marks.

வணிகக் குறியீட்டுப் பதிவாளருடைய அதிகாரங்கள் மற்றும் செயல்பாடுகள் குறித்து விவாதிக்கவும்.

6. Explain the grounds on which patents can be opposed.

எத்தகைய காரணங்களின் அடிப்படையில் காப்புரிமை வழங்குதல் எதிர்க்கப்படலாம் என்பதனை விளக்குக.

PART C — (5 × 4 = 20 marks)

7. Write short notes on FIVE of the following :

பின்வருவனவற்றுள் ஐந்திற்கு சிறு குறிப்புகள் எழுதுக :

(a) Compulsory License

கட்டாய உரிமம்

(b) TRIPS Agreement

டிரிப்ஸ் உடன்படிக்கை

(c) Rights of patentee

காப்புரிமை பெற்றவரின் உரிமைகள்

(d) Collective trade-mark

கூட்டு வணிக முத்திரை

(e) Copyright Board

பதிப்புரிமை வாரியம்

(f) Term of patent right

காப்புரிமை காலம்

(g) Passing off

வணிகப் போலி

PART D — (2 × 6 = 12 marks)

Answer TWO of the following by referring to relevant provisions of law and decided cases. Give cogent reasons.

பின்வருவனவற்றுள் இரண்டிற்கு சட்ட வகையங்கள் மற்றும் தீர்மானிக்கப்பட்ட வழக்குகளைக் கூறி தகுந்த காரணங்களுடன் விடையளிக்கவும்.

8. A foreign applicant files his application for patent without sufficient description of the invention so that the invention is not stolen in India. The controller accepts his contention and grants patent. Decide it.

ஓர் வெளிநாட்டு மனுதாரர் இந்தியாவில் தனது கண்டுபிடிப்பு திருட்டு போகாமலிருக்க, கண்டுபிடிப்பின் போதுமான விவரங்களை குறிப்பிடாமல் காப்புரிமைக்கு மனு ஒன்றை விண்ணப்பிக்கின்றார். கட்டுபாட்டாளரும் அதை ஏற்று காப்புரிமை வழங்குகின்றார். இதை தீர்மானிக்கவும்.

9. Sundar made an application for registration of trade-mark, "CINTHOL", before the trade mark registry. Kumar is the opponent who was the registered proprietor of Trade mark "CINTHOOL" and he pleaded rejection on the ground of deceptive similarity. Can Sundar succeed? Decide.

சுந்தர் என்பவர் வணிக குறியீடு பதிவு துறையில் "சிந்தால்" என்னும் வணிக முத்திரையினை பதிவு செய்ய வேண்டும் என விண்ணப்பம் செய்கிறார். குமார் என்னும் எதிர்மனுதாரர் "சிந்தூல்" என்னும் வணிக முத்திரையின் பதிவு பெற்ற நபர் இதை ஒத்த தன்மையுடையது என நிராகரிக்க வேண்டுகிறார். சுந்தர் வெற்றி பெற இயலுமா? முடிவு செய்க.

10. Mohammed produced a compilation of old well known Tamil songs under the title 'Ninaivugal'? Does it amount to infringement of copyright?

முகம்மது என்பவர் பழைய நன்கு தெரிந்த தமிழ் பாடல்களை 'நினைவுகள்' என்ற தலைப்பில் தொகுத்து தயாரித்தார். அது பதிப்புரிமை உரிமை மீறல் செயல்பாடு ஆகுமா?

---

Register No. | | | | | | | | |

5221–22

**FAXC**

(For the candidates admitted from 2017 – 2018 onwards)

B.A.LL.B. DEGREE (SEMESTER) EXAMINATIONS, JUNE 2022.

(Five-year Regular Course)

Fifth Year – Tenth Semester

HUMAN RIGHTS LAW

GOVERNMENT LAW COLLEGE, TRICHY
07 SEP 2022
LIBRARY

Time : $2\frac{1}{2}$ hours

Maximum : 70 marks

PART A — (2 × 12 = 24 marks)

Answer TWO of the following in about 500 words each.

பின்வருவனவற்றுள் இரண்டிற்கு ஒவ்வொரு வினாவிற்கும் ஏறத்தாழ 500 சொற்களில் விடையளிக்கவும்.

1. "The provisions concerning the Human Rights run throughout the United Nations Charter like a golden thread" – Evaluate.

   ''மனித உரிமைகள் தொடர்புடைய வகையங்கள் ஐ.நா. சாசதனம் முழுவதும் ஒரு தங்க நூல் போல் வியாபித்திருக்கிறது'' - எடுத்தியம்புக.

2. Examine the contribution of the U.N. Commission on Human Rights.

   மனித உரிமைகள் தொடர்புடைய ஐ.நா. ஆணையத்தின் பங்களிப்பை ஆய்வு செய்க.

3. Make a comparative analysis of the provisions of the Indian Constitution with the International Covenant on Civil and Political Rights.

   இந்திய அரசமைப்புச் சட்டத்தின் உறுப்புகளையும், குடிமை மற்றும் அரசியல் உரிமைகளை உள்ளடக்கிய சர்வதேச சாசனத்தையும் ஒப்பாய்வு செய்க.

PART B — (2 × 7 = 14 marks)

Answer TWO of the following in about 300 words each.

பின்வருவனவற்றுள் இரண்டிற்கு ஒவ்வொரு வினாவிற்கும் ஏறத்தாழ 300 சொற்களில் விடையளிக்கவும்.

4. Write a brief note on the ILO's Forced Labour Convention.

   சர்வதேச தொழிலாளர் அமைப்பின் கொத்தடிமை தடுப்பு சாசனத்தைப் பற்றி சிறுகுறிப்பு எழுதுக.

5. Enlist the protection available to a person against arbitrary arrest and detention under the Indian Constitution as well as International Human Rights instruments.

   இந்திய அரசமைப்புச் சட்டம் மற்றும் சர்வதேச மனித உரிமை உடன்படிக்கைகளில், ஏதேச்சாதிகாரமான கைது மற்றும் தடுப்புக்காவலுக்கு எதிராக ஒரு நபருக்கு உள்ள பாதுகாப்புகளைப் பட்டியலிடுக.

6. Point out the role played by the judiciary and legislature in India in protecting the rights of the disabled persons.

மாற்றுத்திறனாளிகளின் உரிமைகளைப் பாதுகாப்பதில் இந்திய நீதித்துறை மற்றும் நாடாளுமன்றத்தின் பங்களிப்பை குறிப்புணர்த்துக.

PART C — (5 × 4 = 20 marks)

7. Write short notes on FIVE of the following.

பின்வருவனவற்றுள் ஐந்திற்கு சிறு குறிப்புகள் எழுதுக.

(a) Rights of Migrant labourers.
புலம்பெயர்ந்த தொழிலாளர்களின் உரிமைகள்.

(b) European Court of Human Rights.
ஐரோப்பிய மனித உரிமைகள் நீதிமன்றம்.

(c) Right to Self Determination.
சுயநிர்ணய உரிமை.

(d) Fractured societies
உடைபட்ட சமூகங்கள்

(e) Article 24 of the Constitution.
அரசமைப்புச் சட்டத்தின் உறுப்பு 24.

(f) Right to Health.
உடல் நல உரிமை.

(g) Rarest of rare cases and death penalty.
அறிதினும் அறிதான வழக்குகள் மற்றும் மரண தண்டனை.

PART D — (2 × 6 = 12 marks)

Answer TWO of the following by referring to relevant provisions of law and decided cases. Give cogent reasons.

பின்வருவனவற்றுள் இரண்டிற்கு சட்டவகையங்கள் மற்றும் தீர்மானிக்கப்பட்ட வழக்குகளைக் கூறி தகுந்த காரணங்களுடன் விடையளிக்கவும்.

8. Raman, a prisoner, was taken to the hospital for a treatment. In that process Raman was handcuffed and tied with a rope in his bed. This was challenged as violative of his basic human rights. Decide.

ராமன் என்ற கைதி, சிகிச்சைக்காக மருத்துவமனைக்கு அழைத்துச் செல்லப்பட்டார். அப்பொழுது அவர் கைகள் விலங்கினால் கட்டப்பட்டு, படுக்கையுடன் கயிற்றினால் கட்டப்பட்டார். இது அவரின் அடிப்படை மனித உரிமைகளை மீறுவதாக வாதிடப்பட்டது. முடிவு செய்க.

9. Mr.N's house property was acquired by the State for an express highway project. The compensation provided to him was so meagre to make a decent living. He seeks adequate compensation arguing from a human rights perspective. State put forths the 'doctrine of eminent domain' defence. Decide.

துரித போக்குவரத்து நெடுஞ்சாலைத் திட்டத்திற்காக திரு.N என்பவரின் வீட்டுச் சொத்து அரசால் கையகப்படுத்தப்படுகிறது. அவருக்கு கொடுக்கப்பட்டிருக்கும் இழப்பீடானது, அடிப்படை வாழ்க்கை கூட வாழ முடியாத அளவிற்கு மிகச் சொற்பமானதாகும். அவர் மனித உரிமைகள் கோணத்திலிருந்து தனக்கு உரிய இழப்பீடு வழங்க வேண்டி வாதுரைக்கிறார். அரசு எதிர்வாதமாக 'நில ஆளுமைக் கோட்பாட்டை' எடுத்துரைக்கிறது. தீர்மானிக்கவும்.

10. Mrs.X is a national of a neighbouring country. She overstayed her visa and how seeks refuge in India. Her claim for the refugee status was rejected and she was prosecuted for unauthorised stay in India. She moves the Supreme Court under Art.32 of the Constitution. Decide.

அண்டை நாட்டை சார்ந்த திருமதி X தனது அயல்நாட்டு நுழைவுரிமை கடவுச்சீட்டு காலம் முடிந்த பிறகும் இந்தியாவில் தங்கிவிட்டு தற்போது தன்னை அகதியாக கருதவேண்டும் என்று முறையிடுகிறார். அவரது கோரிக்கை நிராகரிக்கப்பட்டு, அனுமதி இல்லாமல் இந்தியாவில் இருக்கிறார் என்ற காரணத்திற்காக அவர் மீது குற்ற நடவடிக்கை எடுக்கப்படுகிறது. அரசமைப்புச் சட்டம் உறுப்பு 32-ன் கீழ் அவர் உச்ச நீதிமன்றத்தை நாடுகிறார். தீர்மானிக்கவும்.